சுருக்கம்

நிதி - பேரூராட்சிகள் நிர்வாகம் – 2011–12ம் ஆண்டிற்கான அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப்பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை தலைப்பின் கீழ் ரூ.17,99,45,000/– மற்றும் இயக்கக மற்றும் பராமரிப்பு தலைப்பின் கீழ் ரூ.13,99,64,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது – திட்டப்பணிகள் மேற்கொள்ள அனுமதி கோருதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை

அரசாணை (ப) எண். 46 நாள்: 15.02.2012

படிக்க:

பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் நேர்முக கடித எண். 6717/2011 /உ4, நாள் 01.02.2012.

- - - -

ஆணை:–

பேரூராட்சிகளின் இயக்குநர் மேலே படிக்கப்பட்ட தனது கடிதத்தில், 2011–2012ம் ஆண்டிற்கான அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப்பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை தலைப்பின் கீழ் ரூ.17,99,45,000/– மற்றும் இயக்கக மற்றும் பராமரிப்பு நிதிப்பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை தலைப்பின் கீழ் ரூ.13,99,64,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் இத்தொகையினை பின்வரும் திட்டப்பணிகள் பேரூராட்சிகளில் மேற்கொள்ள ஏதுவாக நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை:–

| வ. எண். | பணியின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு |
|---|---|---|---|
| 1 | 2010–11ம் ஆண்டிற்கான கேளிக்கை வரி மானியத் தலைப்பின் கீழ் மயானம் மற்றும் குடிநீர் திட்டப்பணிகளுக்கு விடுவிக்கப்பட வேண்டிய எஞ்சிய நிலுவைத் தொகை | 106 | 6,88,98,000/– |

| | | | |
|---|---|---|---|
| 2 | அரசாணை (நிலை) எண்.164, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ.2) துறை, நாள் 11.08.2010–ன்படி மேலூர் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தும் 4 பேரூராட்சிகளின் குடிநீர் பணிகளுக்கு விடுவிக்கப்டப வேண்டிய தொகை | 4 | 7,00,00,000/– |
| 3 | குடிநீர் அபிவிருத்தி பணிகள் | 4 | 60,37,000/– |
| 4 | சாலை மேம்பாட்டு பணிகள் | 23 | 1,82,85,000/– |
| 5 | புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல் | 4 | 1,46,00,000/– |
| 6 | பேருந்து நிலைய மேம்பாட்டு பணிகள் | 2 | 21,25,000/– |
| | மொத்தம் | 143 | 17,99,45,000/– |

<u>இயக்கக மற்றும் பராமரிப்பு நிதிப்பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை:–</u>

| வ. எண் | பணியின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு |
|---|---|---|---|
| 1. | குடிநீர் அபிவிருத்தி பணிகள் | 13 | 3,78,50,000 |
| 2. | சாலை புனரமைப்பு பணிகள் | 55 | 7,43,64,000 |
| 3. | அலுவலக கட்டடம் புனரமைப்பு செய்தல் | 12 | 1,84,00,000 |
| 4. | பேருந்து நிலைய அபிவிருத்தி பணிகள் | 4 | 93,50,000 |
| | **மொத்தம்** | **84** | **13,99,64,000** |

மேற்படி பேரூராட்சிகளின் இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசிலனை செய்தது. பரிசிலனையில் 2011–2012ம் ஆண்டிற்கான அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப்பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை தலைப்பின் கீழ் ரூ.17,99,45,000/– மற்றும் இயக்கக மற்றும் பராமரிப்பு நிதிப்பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை தலைப்பின் கீழ் ரூ.13,99,64,000/– மேற்சொன்ன பணிகளை மேற்கொள்ள ஏதுவாக நிதி விடுவித்து ஆணை வெளியிடப்படுகிறது. மேற்காணும் தொகையினை விடுவிக்க பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுமதி மற்றும் அதிகாரமளித்து அரசு ஆணையிடுகிறது.

2. மேற்படி செலவினம் கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

<u>அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை ரூ.17,99,45,000/–</u>

"3604 உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 193 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் – அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் அல்லது அதற்கு சமமான அமைப்புகளுக்கு உதவி – I திட்டத்தில் சேராதது AC அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை 09 உதவித் தொகை 02 மூலதன செலவுக்கான உதவித் தொகை (DPC No. 3604 00 193 AC 0923).